# வருடாந்த அறிக்கை
# 2008



## தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியம்

**தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்**

**பேராதனை.**

# இலங்கையின் தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றின் நலன்புரி நடவடிக்கைகளுக்குமான நம்பிக்கை நிதியம்

## வருடாந்த அறிக்கை - 2008

இலங்கையின் தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றின் நலன்புரி நடவடிக்கைகளுக்குமான நம்பிக்கை நிதியம் என்ற பெயரில் அப்போதைய விவசாய, காணி மற்றும் வனவள அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட 1995-12-15ம் திகதிய அமைச்சரவைப் பத்திரத்தை கருத்திற்கொண்டு 1996-02-07ம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் **தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றின் நலன்புரி நடவடிக்கைகளுக்குமான நம்பிக்கை நிதியத்தை** ஏற்படுத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

தாவரவியல் பூங்காக்களுக்கான நுழைவுச் சீட்டு விற்பனையின் மூலம் கிடைக்கும் வருமானத்தில் 25%த்தை வருடாந்தம், தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றின் நலன்புரி நடவடிக்கைகளுக்குமான நம்பிக்கை நிதியத்திற்கான வருமானமாக ஒதுக்கீடு செய்வதோடு, இந்நிதியத்தின் பிரதான வருமான மூலம் அதுவாகும். அதற்கு மேலதிகமாக இந்நிதியமானது தனது வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக பொருத்தமான நடவடிக்கைகளில் ஈடுபடவும் முடியும்.

# தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியம்

1. நம்பிக்கை நிதியத்தின் பெயர் : இலங்கையின் தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றின் நலன்புரி நடவடிக்கைகளுக்குமான நம்பிக்கை நிதியம்.

2. தன்மை : தாவரவியல் பூங்காக்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் மீண்டெழும் செலவின நடவடிக்கைகளுக்கு நிதி உதவி வழங்குதல்.

3. உரிய சுற்று நிருபங்கள் :

   I) நிதியத்தை ஆரம்பித்தல் - 1917ம் ஆண்டின் 09ம் இலக்க நம்பிக்கை நிதிய கட்டளைச் சட்டத்தின் படி.
   II) கணக்கு வைத்திருத்தலுக்கும் கணக்குகளை அறிக்கைப் படுத்தலுக்குமான திறைசேரிச் சுற்று நிருபம் : 1977 ஆகஸ்ட் 16ம் திகதிய 836ம் இலக்கச் சுற்று நிருபம்.

4. ஆரம்பித்ததிகதி : 1996 டிசம்பர் 20
5. அலுவலகம் : பேராதனை, தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்கள பிரதான பணிமனை.
6. வங்கி : இலங்கை வங்கியின் பேராதனைக் கிளை, கணக்கு இலக்கம் : 0007040848
7. நம்பிக்கை நிதியத்தின் குறிக்கோள்கள் :
   அ) இலங்கையிலும் மற்றும் வெளிநாடுகளிலும் எமது தாவரவியல் பூங்காக்கள் தொடர்பில் நிலவும் அபிபிராயங்களை மேம்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
   ஆ) சூழலியல், கல்வியியல் மற்றும் தாவரங்கள் தொடர்பில் தற்போது நிலவும் பாதுகாப்பு முறைமைகள் பற்றி அர்த்தமுள்ள நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
   இ) தாவரவியல் பூங்காக்களில் சேவையில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகளது துறைசார் அறிவு, செயற்பாடுகள் மற்றும் வசதிகளை மேம்படுத்துவதோடு உரிய செயற்பாடுகளுக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு நிதியுதவி வழங்குதல்.
   ஈ) தாவரச் சேமிப்புக் குறித்தும் முன்னேற்றகரமான வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்தல்.
   உ) தாவரவியல் பூங்காக்களின் பயன்பாட்டுக்காக சூழலியல், கல்வியியல் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பிலான தொழில்நுட்பத்துறை சார் செயற்பாடுகளை மேம்படுத்தலும் அவற்றுக்கு உதவுவதும்.
   ஊ) தாவரவியல் விஞ்ஞானிகளுக்கும் மற்றும் பூங்காவிற்கு வருகை தருகின்றவர்களுக்கும் தேவையான வசதிகளைச் செய்துகொடுப்பதற்குத் தேவையான எந்தவொரு அவசர நிர்மாணப் பணியையும் பொறுப்பேற்றல்.
   எ) தேவையான சந்தர்ப்பகளில் மீண்டெழும் செலவினங்களுக்கான ஒதுக்கீடுகளில் ஏற்படும் குறைகளை குறை நிரப்புச்செய்தல்.

2008ம் ஆண்டில் நிதியத்தின் நிதி நிலைமை

| | |
|---|---|
| 2008-01-01ம் திகதிக்கான ஆரம்ப மீதி | = ரூ. 53, 1736,135.54(வரவு) |
| சேர்க்கப்பட்டது: | |
| 2008ம் வருடத்துக்கான வருமானம் (வைப்புக்கள்) | = ரூ. 23,582,666.00 |
| | ------------------------------ |
| உப மொத்தம் | = ரூ. 77,318,801.54 |
| கழிக்கப்பட்டது: | |
| 2008ம் வருடத்துக்கான செலவு | = ரூ. 36,517,441.25 |
| | ------------------------- |
| 2008-12-31ம் திகதிக்கான மீதி | = ரூ. 40,801,360.29 |

**நிதியத்தின் ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி 2008ம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்ட விஷேட அபிவிருத்திப் பணிகள்.**

- பேராதனை தாவரவியல் பூங்காவினுள் நிர்மணிக்கப்பட்ட புதிய கட்டிடத்தில் அமைந்துள்ள கல்வி மற்றும் பயிற்சி நிலையத்திற்குத் தேவையான தளபாடங்கள், உபகரணங்கள் மற்றும் கணனிகளைக் கொள்வனவு செய்ய நிதியத்தின் மூலம் 2.3 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது.



கொள்வனவு செய்யப்பட்ட கணனிகளைப் பாவித்து பயிற்சி பெறும் மாணவர்கள்

- நிதியத்திலிருந்து 5.3 மில்லியன் ரூபா செலவிடப்பட்டு கம்பஹா தாவரவியல் பூங்காவுக்கு புதிதாக சுவீகரிக்கப்பட்ட காணிகள் அபிவிருத்தி செய்யப்பட்டு,

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மூலம் நீர்த்தேக்கமொன்றும் நிர்மாணிக்கப்பட்டு, தோணித் துறையொன்றும் சணச அபிவிருத்திக் கம்பனி மூலம் அமைக்கப்பட்டது.



கம்பஹா தாவரவியல் பூங்காவின் புதிய பூங்காவில்
அபிவிருத்திப் பிரதேசத்துக்கு
செல்வதற்கான படகு.





கம்பஹா தாவரவியல் நீர்த்தேக்கத்தில்
நிர்மாணிக்கப்பட்ட
படகு விடும் சிறுவர்கள்



கம்பஹா தாவரவியல் பூங்காவில்
நிர்மாணிக்கப்பட்ட நீர்த்தேக்கத்தின்
ஒரு காட்சி

❖ பேராதனை தாவரவியல் பூங்காவிலிருந்து மஹாவெலி ஆற்றுக்குக் குறுக்கே அமைக்கப்பட்டிருக்கும் தொங்கு பாலம் பல வருடங்களாகப் பழுதடைந்திருந்தமையால் அது மூடப்பட்டிருந்தது. அதனைச் சீர் செய்ய பல நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டிருந்த போதும் அவை கைகூடா நிலையில் அரச பொறொயியல் கூட்டுத்தாபனத்தின் உதவியோடு அது புனரமைக்கப்ப்ட்டது. அதற்காக நிதியத்தின் மூலம் ரூ. 5.1 மில்லியன் செலவிடப்பட்டது.





திருததியமைககபபடட ெதாஙகு பாலம்

❖ கனேவத்த மூலிகைத் தாவரப் பூங்காவின் பொறுப்பதிகாரிக்கு உத்தியோகபூர்வ இல்லமொன்று இருக்காத காரணத்தால் பூங்காவின் பணிகளை உரிய முறையில் முன்னெடுக்க முடியவில்லை. அதனால் நிதியத்திலிருந்து 6.2 மில்லியன் ரூபா செலவிடப்பட்டு வடமேல் மாகாணப் பொறியியலாளரால் உத்தியோகபூர்வ இல்லமொன்று நிர்மாணிக்கப்பட்டது.



கனேவத்த மூலிகைத் தாவரப் பூங்காவின்

பொறுப்பதிகாரிக்கான உத்தியோக இல்லம்

- புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அவிசாவலை ஈர வலய தாவரவியல் பூங்காவின் பூர்வாங்கப் பணிகளுக்காகக் கிடைக்கப்பெற்ற ஒதுக்கீடுகள் போதுமானவையாக அமையாமையால் நிதியத்திலிருந்து பணம் ஒதுக்கப்பட்டு பொலித்தீன் இல்லங்கள் இரண்டினை நிர்மாணிக்கும் பணிகள் இவ்வருடம் ஆரம்பிக்கப்பட்டன. இதற்கு ஹன்வெல்ல பிரதேச செயலாளரின் உதவி பெற்றுக்கொள்ளப்பட்டது. இதற்காக 1.8 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது.



அவிசாவலை ஈர வலய தாவரவியல் பூங்காவின் பொலித்தீன் இல்ல நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படல்

- நிதியத்திலிருந்து 6.6 மில்லியன் ரூபா செலவிடப்பட்டு பேராதனை, ஹக்கல தாவரவியல் பூங்காக்களின் உத்தியோகபூர்வ இல்லங்கள் திருத்தியமைக்கப்பட்டன.

**நிதியத்தின் கீழ் 2008ம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட விஷேட அபிவிருத்திப் பணிகள் பற்றிய சுருக்கம்.**

| விடயம் | செலவு (ரூ) |
|---|---|
| 1. கல்வி ,மற்றும் பயிற்சி அலகுக்கான தளபாடங்கள் | 1,288,988.00 |
| 2. பேராதனைப் பூங்காவில் கழிவறை நிர்மாணம் | 1,648,260.00 |
| 3. கல்வி ,மற்றும் பயிற்சி அலகுக்கான கணனிகள் | 1,116,337.00 |
| 4. கம்பஹா பூங்கா அபிவிருத்தி | 5,340,500.00 |
| 5. கன்று நடுகைப் பொருட்கள் | 61,975.00 |
| 6. புத்தகக் கொள்வனவு / வழிகாட்டிக் கையேடு பிரசுரித்தல் | 196,290.00 |
| 7. பயிற்சி நிகழ்ச்சிகள் | 1,317,612.00 |
| 8. அவிசாவலை பூங்கா அபிவிருத்தி | 2,134,685.00 |
| 9. பேராதனைப் பூங்காவின் உணவக அபிவிருத்தி | 1,786,466.00 |
| 10. ஹக்கல தொழிலாளர் இல்ல அபிவிருத்தி | 2,935,000.00 |
| 11. பேராதனை நீர்த்தாங்கி நிர்மாணம் | 1,000,000.00 |
| 12. பேராதனை பாதுகாப்புச் சுவர் நிர்மாணம் | 2,700,000.00 |
| 13. பேராதனை தொங்கு பாலத் திருத்தம் | 5,179,569.00 |
| 14. கனேவத்த பூங்கா நிர்மாணம் | 6,290,000.00 |
| 15. ஹக்கல வாகனத் தரிப்பிட நிர்மாணம் | 332,55,.00 |

எஸ். லியனகம
தலைவர், தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியம்
மற்றும் செயலாளர், விளையாட்டு மற்றும் பொதுப் பூங்காக்கள் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சு.

கலாநிதி. டீ. எஸ். ஏ. விஜேசுந்தர
செயலாளர், தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியம்
மற்றும் பணிப்பாளர் நாயகம், தேசிய தாவரவியல் திணைக்களம்